# தமிழீழ அரசியல்துறை
# POLITICAL WING OF TAMILEELAM

tat.info.international@gmail.com +(44) 0734 983 8393

**நிர்வாகம்** **TAT20250416-009T**

**தமிழீழ அரசியல்துறை**

**அனைத்து நாடுகள்**

**16-04-2025**

## தமிழர்கள் மீதான வன்மத்தை விதைக்கும் "ஜாட்" (JATT) திரைப்படத்திற்கு எதிரான கண்டன அறிக்கை!

கடந்த பல நூற்றாண்டுகளாக தமிழர்களின் வரலாற்றினை சிதைப்பதற்கு வட இந்தியர்களின் தலைமையில், பல வகைப்பட்ட வரலாற்று அழிப்பு நடவடிக்கைகள் தொலைநோக்குத் திட்டங்களாக தீட்டப்பட்டு கச்சிதமாக அரங்கேற்றப்பட்டு வருகின்றது. எல்லாவழிகளிலும் உலகை ஆண்ட மிகப்பெரிய சக்தியாக தமிழினம் இருந்ததனால், அண்ணளவாக 3000 வருடங்களுக்கு முன்பிருந்தே தமிழின வரலாறுகளை அழிப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. ஒரே ஒரு உதாரணத்தை உங்களுக்கு சொல்ல வேண்டும் எனில், நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட, தமிழ் இனத்தின் பண்பாட்டுப் பெருமைமிக்க மாமன்னன் இராவணன் ஆவான். உண்மையில் தமிழ் உலகம் பெற்றெடுத்த மாபெரும் வீரனவன். ஆரியர்களின் வரலாற்றுத் திரிபுகளால், எமது முப்பாட்டன் இராவணன் கொடுங்கோலனாகவும், அவனைச் சார்ந்தோர் தீயவர்களாகவும் சித்தரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஆரியத்தின் கைக்கூலியான, தமிழ் மகாகவியான கம்பன் படைத்த கம்பராமாயணம் போன்று, தமிழர்களை இழிவுபடுத்தும் காப்பியங்கள் வழியாகத் தமிழின வரலாற்றை அழித்து, நல்லாட்சி புரிந்த தமிழின மாமன்னர்களை தீயவர்களாக சித்தரித்து வந்த ஆரியம் இன்று, நவீன தொழில்நுட்ப வசதிகளோடு கூடிய திரைப்படங்கள் வாயிலாக, எமது தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது வீரவிடுதலைப் போராட்ட வரலாற்றை அழிக்கும் முயற்சியில் கச்சிதமாக ஈடுபட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக, 2009 மே விடுதலைப் புலிகளின் நடைமுறை அரசு தமிழீழத்தில் இயங்கா நிலைக்கு வந்தபின் வெளிவந்த, **பேமிலி மேன் (Family man),** என்ற வலைத் தொடர், **மெட்ராஸ் கபே, (Madras cafe)** முதல் , சமீபத்தில் வெளியிடப்பட்ட **ஜாட் (JATT)** திரைப்படம் வரை, வெளிவந்த அனைத்து திரைப்படங்கள் எமக்கு அப்பட்டமாக உணர்த்தி நிற்கின்றன. தமிழினத்தையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழர்களின் தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களையும், தமிழீழ விடுதலைக்காக தமது உயிர்களை அர்ப்பணித்துப் போராடிய, விடுதலைப் போராளிகளையும் கொச்சைப்படுத்தி, கொள்ளைக் கூட்டத் தலைவர்களாகவும் சித்தரித்து, வெளிவந்திருக்கும் **"ஜாட்"(JATT)** திரைப்படத்திற்கு, எமது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

tat.info.international@gmail.com    +(44) 0734 983 8393

இந்தியாவின் வடக்கில் நடக்கும் கதைக் களத்தில், கதைக்கு எள்ளளவும் தொடர்பின்றி, **“யாழ்ப்பாணப் புலிப்படை”** என்று ஏதோவொரு உள்நோக்கத்துடன் பெயர்வைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் தவறானது போலவும், ஆயுதப் போராட்ட காலத்தில், தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்திய வரிப்புலிச் சீருடைகளை நடிகர்களுக்கு அணிவித்து, தாய் நாட்டின் விடுதலைக்காக உயிர் ஈகம் செய்த, விடுதலைப் போராட்டத்தின் வீரத்தளபதிகளை இழிவுபடுத்தும் நோக்கோடு, அந்த வீரத்தளபதிகளைக் கொடூர வில்லன்கள் போலக் கட்டமைத்துக் காட்சிப்படுத்தியிருப்பதை, தன்மானமுள்ள தமிழர்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். முற்றுமுழுதாக தமிழர்கள் மீதான இனவெறுப்பின் அடிப்படையிலேயே, இந்தத் திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை, எளிதில் தன்மானமுள்ள தமிழர்களால் உணர முடிகின்றது. தாயகக்கனவுடன் வீரச்சாவினைத் தழுவி, உலகத் தமிழர்களின் இதயக் கோவிலில் வைத்து வணங்கப்படுகின்ற, எமது உயிரிலும் மேலான மாவீரத் தெய்வங்களை அவமதிப்பதை, ஒருபோதும் உலகத் தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, **“ஜாட்” (JATT)** திரைப்படக் குழு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தவறாகச் சித்தரிக்கும், சர்ச்சைக்குரிய காட்சிகளை உடனடியாக நீக்க வேண்டுமென தமிழீழ அரசியல் துறையினராகிய நாங்கள் வலியுறுத்தி வேண்டுகின்றோம். ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து **“ஜாட்” (JATT)** திரைப்படத்தை உடனடியாக இந்தியாவிலும், புலம்பெயர் நாடுகளிலும் தடை செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் பெரும் மக்கள் போராட்டத்தை தமிழீழ அரசியல் துறையினராகிய நாங்கள், புலம்பெயர் நாடுகளில் உள்ள அனைத்துத் தமிழ்த் தேசிய அமைப்புக்களையும் ஒருங்கிணைத்து, திரையரங்குகளை முற்றுகையிட்டு, தடுத்து நிறுத்தத் தயங்கமாட்டோமென எச்சரிக்கின்றோம். எமது எச்சரிக்கையுடன் கலந்த இந்த வேண்டுகோள் உதாசீனப்படுத்தப்பட்டால், ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட இனங்களுக்கான பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில், ஒரு இனத்தை அவமதித்த குற்றத்திற்காக, ஜாட் **(JATT)** திரைப்படக் குழுமத்திற்கு எதிராக, சர்வதேச மற்றும் ஐரோப்பிய நீதிமன்றங்களில், பாரிய நஷ்டஈடு கோரி, சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவும் தயங்க மாட்டோம் என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பேரன்புக்குரிய தமிழ் மக்களே! விழித்திருங்கள்!**

உங்களுடைய பிரதான பொழுதுபோக்கு நிகழ்வுகளான தொலைக்காட்சித் தொடர்கள், குறும்படங்கள், திரைப்படங்கள், சமூக வலைத்தளச் செய்திகள் ஊடாக, உங்களுடைய தேசிய உணர்வுகளை திசைமாற்றும் வேலையை இவர்கள் ஆண்டாண்டு காலமாக இலாபகரமாகச் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உண்மையில் எமது விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் மத்தியில் ஆழ வேர்பதித்து நிற்கும், ஒரு தேசிய விடுதலை இயக்கமாகும். தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும், உன்னதமான விடுதலை இயக்கமாக, பல்லாண்டுகளாக உங்களால் வளர்த்து எடுக்கப்பட்ட பெரும் விடுதலை இயக்கமாகும்.

tat.info.international@gmail.com +(44) 0734 983 8393


ஆகையால், இந்த விடுதலை இயக்கத்தின், வீர வரலாறுகளை இழிவுபடுத்தவோ, அன்றி இல்லாதொழிக்கவோ நினைக்கும் நயவஞ்சகர்களின் நாசகாரச் செயற்பாடுகளை, விளங்கிக்கொண்டு, அனைவரும் ஒன்றிணைந்து, இதுபோன்ற திரைப்படைப்புக்கு ஊடாகவும் இவர்கள் உருவாக்கி வரும் சூழ்ச்சிகரமான வலைப்பின்னலை இனங்கண்டு, வருங்காலத்திலும் இதுபோன்று, தொன்மைமிகு எமது இனத்தையும், வீரமிகு எமது விடுதலைப் போராட்டத்தையும், தமிழினத்தின் பெருமைமிகு அடையாளமாகிய எமது தேசிய தலைவரையும் கொச்சைப்படுத்தி, வெளிவரும் படைப்புக்களுக்கு எதிராகவும் போராட முன்வர வேண்டுமென பேரன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

**"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"**

கி. நல்லையா

திரு. கி. நல்லையா
நிர்வாகப் பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்

ச. அசோகா

திருமதி ச. அசோகா
பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்